**SAI RAM** ENGINEERING COLLEGE

## Sri Sairam Engineering College - 17th Graduation Day celebration

## held on 26 March, 2016. - in various media.

---

**NEWSPAPER : ANDHRA JOTHI**

**PUBLISHED ON : 27 - 3 - 2016**



# సమాజ శ్రేయస్సుకు పాటుపడండి

**సాయిరాం ఇంజనీరింగ్ కళాశాల స్నాతకోత్సవంలో విద్యార్థులకు శాస్త్రవేత్త వైఎస్ రాజన్ సూచన**


విద్యార్థులకు డిగ్రీలు పంపిణీ చేస్తున్న వైఎస్ రాజన్



డిగ్రీలు అందుకున్న విద్యార్థులు

**ప్యారీస్:** ఉన్నత విద్యను అభ్యసిస్తున్న విద్యార్థులు ఎల్లప్పుడూ సమాజ శ్రేయస్సుకు ఉపయోగపడేలా ఉండాలని ఇస్రో, నిట్ సంస్థల శాస్త్రవేత్త పద్మశ్రీ వైఎస్ రాజన్ సూచించారు. స్థానిక వెస్ట్ తాంబరం సాయిలియో నగర్‌లోని శ్రీ సాయిరాం ఇంజనీరింగ్ కళాశాల 17వ స్నాతకోత్సవం శనివారం ఉదయం ఘనంగా జరిగింది. సాయిరాం విద్యా సంస్థల సీఈఓ సాయిప్రకాష్ లియో ముత్తు అధ్యక్షతన జరిగిన ఈ వేడుకల్లో వైఎస్ రాజన్ ముఖ్యఅతిథిగా పాల్గొని మొత్తం 1,217 మంది విద్యార్థినీవిద్యార్థులకు డిగ్రీలు, అన్నా వర్శిటీ నుంచి బంగారుపతకం సాధించిన ఇద్దరు విద్యార్థినులు, 170 మంది ర్యాంకర్లకు రూ.35 లక్షల విలువ గల నగదు పురస్కారాన్ని అందచేసి అభినందించారు. ఈ సందర్భంగా ఆయన విద్యార్థులను ఉద్దేశించి మాట్లాడుతూ, ప్రస్తుతం వేగంగా అభివృద్ధి చెందుతున్న టెక్నాలజీకి అనుగుణంగా ఉపయోగపడే కోర్సుల్లో విద్యార్థులు రాణించవచ్చన్నారు. భారతదేశ జనాభా 125 కోట్ల మందిలో సుమారు 10 కోట్ల మంది సిరిమంతులని, మరో 20 కోట్ల మంది ఉన్నత మధ్యతరగతికి చెందిన వారు కాగా, 75 కోట్ల మంది శ్రామిక వర్గాల వారు ఉన్నారన్నారు. 24 ఏళ్లకు లోపు ఉన్న యువత సుమారు 2 కోట్ల మంది ఉన్నారని, 8వ తరగతి వరకు చదువుకొని వారు 14 కోట్ల మంది ఉన్నారని, అయితే సిరిమంతులు మినహాయించి మిగతా వారి అవసరాలను తీర్చే వారు కరువయ్యారన్నారు. సాయిరాం విద్యాసంస్థల వ్యవస్థాపకుడు ఎంజేఎఫ్ లయన్ లియో ముత్తు భౌతికంగా మన మధ్య లేకపోయినప్పటికి ఆయన చేపట్టిన సేవ వల్ల లక్షలాది మంది విద్యార్థులు ఉన్నత స్థాయికి చేరుకోగలుగుతున్నారని అభినందించారు. పేద కుటుంబాలకు చెందిన కస్తూరి ప్రియ, సంధ్య, శివరంజని, పరశురామన్, కృష్ణ అనే విద్యార్థినీవిద్యార్థులు ఉచిత విద్యను అభ్యసిస్తూ అన్నా వర్శిటీ ర్యాంకులు సాధించడం ప్రశంసనీయమన్నారు.

ముందుగా సాయిప్రకాష్ లియో ముత్తు తన అధ్యక్ష ఉపన్యాసంలో, సాయిరాం విద్యా సంస్థలు అందిస్తున్న సేవలను వివరించారు. 2015వ విద్యా సంవత్సరానికి సంబంధించి తమ సంస్థలకు చెందిన దివ్యప్రియ, స్నేహలక్ష్మిలు అన్నా వర్శిటీ తొలి ర్యాంకులు సాధించి బంగారుపతకాలను సొంతం చేసుకున్నారన్నారు. అదే విధంగా 170 మంది ర్యాంకర్లలో 21 మంది 1 నుంచి 5వ స్థానంలో నిలిచి తమ సంస్థకు గౌరవం చేకూర్చారని తెలిపారు. రాష్ట్రంలోని టాప్ టెన్ ఇంజనీరింగ్ కళాశాలల్లో తాము కూడా చోటుచేసుకోవడం గర్వకారణంగా ఉందన్నారు. టీసీఎస్ వంటి ప్రముఖ కార్పొరేట్ సంస్థలు గత 10 ఏళ్లుగా నిర్వహిస్తున్న క్యాంపస్ ఇంటర్వ్యూలలో ఇప్పటివరకు తమ విద్యాసంస్థలకు చెందిన 90 శాతం మంది విద్యార్థులు ఎంపికై లబ్ధి పొందుతున్నారన్నారు. ఈ స్నాతకోత్సవంలో సంస్థ ఛైర్‌పర్సన్ కలైసెల్విలియో ముత్తు, ప్రిన్సిపాల్ డాక్టర్ సీపీ జయకుమార్, సప్తగిరి ఎడ్యుకేషనల్ ట్రస్ట్ ట్రస్టీ జె.షర్మిల రాజా, మాజీ ఐఏఎస్ అధికారి ఎం. సత్యమూర్తి, సాయిరాం ఇన్స్టిట్యూట్ ఆఫ్ మేనేజ్‌మెంట్ స్టడీస్ డైరెక్టర్ డాక్టర్ కె.మారన్, విద్యార్థుల తల్లిదండ్రులు హాజరై పట్టభద్రులు, ర్యాంకర్లను అభినందించారు. డీన్ డాక్టర్ ఎ.రాజేంద్రప్రసాద్ వందన సమర్పణ చేశారు.

**NEWSPAPER : DINAMANI**

**PUBLISHED ON : 27 - 3 - 2016**

# நேர்மறை சிந்தனையுடன் செயல்பட வேண்டும்

## பட்டதாரிகளுக்கு ஒய்.எஸ்.ராஜன் அறிவுரை



மாணவிக்கு பட்டம் வழங்கிய இந்திய விண்வெளி ஆய்வு மைய முன்னாள் பேராசிரியர் ஒய்.எஸ்.ராஜன்.

**தாம்பரம், மார்ச் 26:** தன்னம்பிக்கையோடும், நேர்மறை சிந்தனையோடும் வாழ்நாள் முழுக்க செயல்பட வேண்டும் என பட்டம் பெற்ற மாணவர்களை இந்திய விண்வெளி ஆய்வு மைய முன்னாள் பேராசிரியரும், மணிப்பூர் என்.ஐ.டி. முன்னாள் தலைவருமான ஒய்.எஸ். ராஜன் அறிவுறுத்தினார்.

மேற்கு தாம்பரம் ஸ்ரீ சாய் ராம் பொறியியல் கல்லூரியின் 17-வது பட்டமளிப்பு விழா சனிக்கிழமை நடைபெற்றது. விழாவில், 1,217 பேருக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன. இவர்களில் 2 தங்கப் பதக்கங்களுடன் 170 பேர் அண்ணா பல்கலைக்கழக அளவில் சிறப்பிடம் பெற்றிருப்பதும், 890 பேர் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

விழாவில் ராஜன் பேசியதாவது:-

அனைத்துத் துறைகளிலும் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டு இருக்கும் தொழில்நுட்ப முன்னேற்றமானது, புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கிக் கொண்டே இருக்கின்றன. எனவே சூழ்நிலைக்கேற்ப திறமை, அறிவாற்றலை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். இதனால் வாழ்க்கையில் முன்னேறலாம்.

உடல்நலத்தைப் பேணிக் காக்கும் வகையில் விளையாட்டு, உடற்பயிற்சி ஆகியவற்றில் ஈடுபட வேண்டும். தன்னம்பிக்கையோடும், நேர்மறை சிந்தனையோடும் வாழ்நாள் முழுக்க செயல்பட வேண்டும் மகாகவி சுப்பிரமணிய பாரதியின் புதிய ஆத்திச்சூடியைப் பின்பற்றி வாழ்வை வளமாக்கிக் கொள்ள வேண்டும் என்றார்.

ஸ்ரீ சாய்ராம் கல்விக் குழுமத் துணைத் தலைவர் கலைச்செல்வி லியோ முத்து, அறங்காவலர் ஷர்மிளா ராஜா, தலைமை செயல் அதிகாரி சாய்பிரகாஷ் லியோ முத்து, மேலாண்மைத் துறை இயக்குநர் கே.மாறன், நிர்வாக இயக்குநர் எம்.சத்தியமூர்த்தி, கல்லூரி முதல்வர் சி.வி.ஜெயக்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

NEWSPAPER : MAALAI THAMILAGAM ( 1 )

PUBLISHED ON : 27 - Mar - 2016

மாலை தமிழகம்

# ஸ்ரீசாய்ராம் பொறியியல் கல்லூரி 17வது பட்டமளிப்பு விழா

## தமிழகத்தில் சிறந்த கல்லூரியாக 3வது ஆண்டாக முதல் இடம்!




**சென்னை, மார்ச் 27-**

சென்னை அடுத்த மேற்கு தாம்பரம் ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரியின் 17வது பட்டமளிப்பு விழா, கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ லியோமுத்து உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்றது. இந்த விழாவில், பட்டம் பெற வந்த மாணவர்கள், பெற்றோர், உறவினர் என, 4,000 பேர் கலந்து கொண்டனர்.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் முன்னாள் பேராசிரியரும் மணிப்பூர் என்.ஐ.டி.,யின் முன்னாள் தலைவருமான பத்ம ஸ்ரீ ஓய்.எஸ்.இராஜன், பட்டமளிப்பு விழா உரையாற்றி, மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கினார். மேலும் தன் உரையின் துவக்கத்தில், அண்ணா பல்கலைக்கழகதேர்வில் முதலிடம் பிடித்த மாணவர்களுக்கும், பல்கலைக்கழக ரேங்க் பெற்ற மாணவர்களுக்கும் மற்றும் இளங்கலை, முதுகலை பட்டதாரிகளுக்கும் வாழ்த்து தெரிவித்தார்.

நடுத்தர வர்க்கம் அதிகம் நிறைந்த நாடான இந்தியாவில் குறிப்பாக கல்வித் துறையில் தனியார் நிறுவனங்களின் பங்களிப்பு இன்றியமையாதது. சேவை மனப்பான்மை அடிப்படையில் லியோ முத்துவால் உருவாக்கப்பட்ட ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரி கல்விப் பணியில் சாதனை படைத்து வருவது மகிழ்ச்சிக்குரியது.

மாணவர்களாகிய நீங்கள் உங்களது எதிர்கால வாழ்க்கைக்கு மட்டுமின்றி நாட்டு வளர்ச்சிக்கு பங்களிக்கும் வகையில் பணியாற்ற வேண்டும். வாழ்வில் வெற்றி பெற மாணவர்கள் தங்களது திறனை மேம்படுத்தி கொள்வதன் மூலம் புதிய கண்டுபிடிப்புகளை நாட்டுக்கு அர்ப்பணிக்க வேண்டும். மாணவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் பயில்வதன் மூலம் வாழ்வில் மென்மேலும் உயர்வடைய முடியும்.

மாணவர்கள் தங்கள் உடற்கட்டமைப்பை பேணி காப்பதன் மூலம் சமுதாய வளர்ச்சிக்கு உதவ முடியும். மேலும் பெற்றோர், ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தும் வகையில் எதிர்கால தலைமுறைக்கு நம்பிக்கையையும், உத்வேகத்தையும் அளித்தல் மிகவும் இன்றியமையாதது.

மாறாக எதிர்மறை சிந்தனை பரவுவதை தடுத்தல் இன்றியமையாதது.

மேலும் இவ்விழாவில் மகாகவி சுப்ரமணிய பாரதியாரின் புதிய ஆத்திச்சூடியை சுட்டிகாட்டி அதன்படி வாழ்வை வளமாக்கி கொள்வதன் மூலம் வாழ்வில் வெற்றி பெற முடியும் என்று தனது உரையை நிறைவு செய்தார்.

சாய்ராம் கல்வி நிறுவனங்களின் துணைத் தலைவர் கலைச்செல்வி லியோமுத்து, குத்துவிளக்கேற்றி விழாவை துவக்கி வைக்க, 977 இளங்கலை பொறியியல் மற்றும் 240 முதுகலை பிரிவுனை, மொத்தம் 1,217 மாணவர்கள் பட்டம் பெற்றனர். இளங்கலை பிரிவில் பட்டம் பெற்றவர்களில் 96 சதவீதம், அதாவது 890 மாணவர்கள் முதல் வகுப்பு மற்றும் டிஸ்டிங்ஷன் பெற்று தேர்வு பெற்றது குறிப்பிடத்தக்கது. பட்டம் பெற்ற மாணவர்களில் இரண்டு தங்க பதக்கங்களுடன் 170 பல்கலைக்கழக ரேங்க் பெற்று 2015ம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழக மாணவர்களின் 'தர எண்ணிக்கை'க்கான பட்டியலில் தமிழகத்திலேயே சாய்ராம் கல்லூரி முதலிடம் பெற்றது சிறப்பு. இந்த முதலிடமானது கடந்த மூன்று வருடங்களாக தொடர்ந்து பெற்று வருவது கூடுதல் சிறப்பாகும்.

கல்லூரியின் தலைமை நிர்வாக அதிகாரி சாய்பிரகாஷ் லியோமுத்து, தம் தலைமை உரையில் கூறியதாவது, ''தமிழக பொறியியல் கல்லூரிகளின் தரத்தில் எப்பொழுதும் முதல் பத்து இடங்களுக்குள் இருக்கும் எங்கள் கல்லூரியின் பலம், கல்விக்காக மட்டுமில்லாமல் சமுதாய வளர்ச்சி நோக்கத்தோடு கலந்த கல்வி போதனை மற்றும் பல்கலைக்கழக தேர்வு வெற்றி சதவீதமாகும். அத்துடன் கடந்த 10 வருடங்களாக இந்திய மற்றும் உலக அளவிலான நிறுவனங்களில், எங்கள் மாணவர்களில் 90 சதவீதம் பேருக்கு மேல் உறுதியாக வேலை வாய்ப்பை ஏற்படுத்தி தருவது எங்களது தனிச்சிறப்பு. நன்றாக படிக்க கூடிய மாணவர்கள் மட்டுமல்லாமல் ஓரளவு படிக்கக் கூடிய எங்கள் மாணவர்களையும் சிறப்பாக மதிப்பெண் எடுக்க வைக்க அனைத்து மாணவர்களும் சமூகத்தில் நல்ல அந்தஸ்த்துடன் இந்தியாவின் சிறந்த குடிமகன்களாக மாற்றுவதுதான் எங்கள் தலையாய குறிக்கோள்.

அதற்கான பயிற்சியை முழு மூச்சுடன் செயல்படுத்தி வருகிறோம். அண்ணா பல்கலைக்கழகத்தில் எங்கள் மாணவர்கள் பெற்ற தர எண்ணிக்கையினை பார்க்கும் போது கல்லூரி ஆரம்பித்த நாள் முதல் இன்றுவரை 818 பல்கலைகழக ரேங்க் மற்றும் 24 தங்க பதக்கங்களையும் எங்கள் மாணவர்கள் பெற்றிருக்கின்றனர் என்பதை பெருமையுடன் குறிப்பிட விரும்புகின்றேன் என்றார்.

விழாவில், கல்லூரி முதல்வர் ஜெயக்குமார், கல்லூரியின் மேலாண்மை துறை, இயக்குனர். மாறன், சாய்ராம் கல்வி குழுமத்தின் டிரஸ்டி சர்மிளா ராஜா மற்றும் செயல் இயக்குநர் சத்தியமூர்த்தி, ராஜேந்திர பிரசாத் உட்பட பலர் கலந்து கொண்டனர். கல்லூரி நிர்வாகம் சார்பில், ரூபாய் 35 லட்சம் மதிப்பிலான தங்க பதக்கம் பல்கலைக்கழக அளவிலான ரேங்க் பெற்ற மாணவர்களுக்கு வழங்கப் பட்டது.

**NEWSPAPER : MAALAI THAMILAGAM ( 2 )**

**PUBLISHED ON : 27 - Mar - 2016**




சென்னை அடுத்த மேற்கு தாம்பரம் ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரியின் 17வதுபட்டமளிப்பு விழாவில், மணிப்பூர் என்.ஐ.டி.,யின் முன்னாள் தலைவர் ஒய்.எஸ்.இராஜன், கலந்து கொண்டு மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கினார். இதில் சாய்ராம் கல்வி நிறுவனங்களின் துணைத் தலைவர் கலைச்செல்வி லியோமுத்து, தலைமை நிர்வாக அதிகாரி சாய்பிரகாஷ் லியோமுத்து, கல்லூரி முதல்வர் ஜெயக்குமார், கல்லூரியின் மேலாண்மைதுறை, இயக்குனர் மாறன், சாய்ராம் கல்வி குழுமத்தின் டிரஸ்டி சர்மிளா ராஜா மற்றும் செயல் இயக்குநர் சத்தியமூர்த்தி, ராஜேந்திர பிரசாத் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**NEWSPAPER : MAKKAL KURAL**

**PUBLISHED ON : 27 - Mar - 2016**



## அண்ணா பல்கலைக்கழக தர வரிசையில் 3–வது முறையாக முதலிடம்

# சாய்ராம் என்ஜினீயரிங் கல்லூரி 1217 மாணவர்களுக்கு பட்டம்: இஸ்ரோ பேராசிரியர் ஒய்.எஸ்.ராஜன் வழங்கினார்



**சாய்பிரகாஷ் லியோ முத்து பெருமிதம்**

**✱ 890 மாணவர்கள் முதல் ரேங்க் ✱ 2 பேருக்கு தங்க மெடல்**
**✱ 170 மாணவர்களுக்கு பல்கலைக்கழக ரேங்க்**

சென்னை, மார்ச் 27–

சாய் ராம் என்ஜினியரிங் கல்லூரி அண்ணா பல்கலைக்கழக தர வரிசையில் 3–வது ஆண்டாக முதலிடம் பிடித்துள்ளது என்று இதன் தலைமை செயல் அதிகாரி சாய்பிரகாஷ் லியோ முத்து பெருமிதத்துடன் தெரிவித்தார்.

மேற்கு தாம்பரம் சாய் ராம் என்ஜினீயரிங் கல்லூரியின் 17–வது பட்டமளிப்பு விழா கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள ஸ்ரீலியோ முத்து உள் விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்றது.

விழாவில், 1,217 பேருக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன. இவர்களில் 2 தங்கப் பதக்கங்களுடன் 170 பேர் அண்ணா பல்கலைக்கழக அளவில் சிறப்பிடம் பெற்றிருப்பதும், 890 பேர் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் முன்னாள் பேராசிரியரும், மணிப்பூர் என்.ஐ.டி. யின் முன்னாள் தலைவருமான விஞ்ஞானி ஒய்.எஸ்.ராஜன் பட்டமளிப்பு உரையாற்றி மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கினார்.

ஸ்ரீசாய்ராம் கல்விக் குழுமத் துணைத் தலைவர் கலைச்செல்வி லியோ முத்து குத்துவிளக்கேற்றி விழாவை துவக்கி வைத்து தமது தலைமை உரையில் பேசுகையில்,

பட்டம் பெற்ற மாணவர்களில் 2 தங்க மெடல்களுடன் 170 பல்கலைக்கழக ரேங்க் பெற்று, 2015–ம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழக மாணவர்களின் தர எண்ணிக்கைக்கான பட்டியலில் தமிழகத்திலேயே சாய்ராம் கல்லூரி முதலிடம் பெற்றது சிறப்பாகும். இந்த முதலிடமானது கடந்த 3 வருடங்களாக தொடர்ந்து பெற்று வருவது மிக சிறப்பாகும். கல்லூரி நிர்வாகம் சார்பாக ரூ.35 லட்சம் மதிப்பிலான தங்க பதக்கத்தை பல்கலைக்கழக அளவிலான ரேங்க் பெற்ற மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

கடந்த 10 வருடங்களாக இந்தியா மற்றும் உலக அளவிலான நிறுவனங்களில் எங்கள் மாணவர்களில் 90% பேருக்கு மேல் உறுதியாக வேலைவாய்ப்பை ஏற்படுத்தி தருதல் எங்கள் தனிச்சிறப்பு என்றார்.

முன்னதாக கல்லூரி முதல்வர் சி.வி. ஜெயக்குமார் வரவேற்புரையாற்றினார்.

கல்லூரியின் மேலாண்மை துறை இயக்குனர் க.மாறன் வாழ்த்துரையில், இந்திய கல்லூரிகளுக்கு தர சான்றிதழ் வழங்கும் 'நேஷனல் போர்டு ஆப் அக்ரடிட்டேசன்' நிறுவனத்தால் கல்லூரியின் அனைத்து துறைகளும் தரச் சான்று பெற்றுள்ளது என்றார்.

விழாவில் இந்திய விண்வெளி ஆய்வு மைய முன்னாள் பேராசிரியரும், மணிப்பூர் என்.ஐ.டி. முன்னாள் தலைவருமான ஒய்.எஸ். ராஜன் பேசியதாவது:–

மாணவர்கள் தன்னம்பிக்கையோடும், நேர்மறை சிந்தனையோடும் வாழ்நாள் முழுக்க செயல்பட வேண்டும்.

அனைத்துத் துறைகளிலும் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டு இருக்கும் தொழில்நுட்ப முன்னேற்றமானது, புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கிக் கொண்டே இருக்கின்றன.

எனவே சூழ்நிலைக்கேற்ப திறமை, அறிவாற்றலை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். இதனால் வாழ்க்கையில் முன்னேறலாம்.

உடல்நலத்தைப் பேணிக் காக்கும் வகையில் விளையாட்டு, உடற்பயிற்சி ஆகியவற்றில் ஈடுபட வேண்டும். தன்னம்பிக்கையோடும், நேர்மறை சிந்தனையோடும் வாழ்நாள் முழுக்க செயல்பட வேண்டும் மகாகவி சுப்பிரமணிய பாரதியின் புதிய ஆத்திச்சூடியைப் பின்பற்றி வாழ்வை வளமாக்கிக் கொள்ள வேண்டும் என்றார்.

சாய்ராம் கல்வி குழும அறங்காவலர் ஷர்மிளா ராஜா, மேலாண்மைத் துறை இயக்குநர் கே.மாறன், நிர்வாக இயக்குநர் எம்.சத்தியமூர்த்தி, டீன் ராசேந்திர பிரசாத், கல்லூரி முதல்வர் சி.வி.ஜெயக்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**NEWSPAPER : TAMIL HINDU**

**PUBLISHED ON : 27 - Mar - 2016**

# சாய்ராம் பொறியியல் கல்லூரியில் பட்டமளிப்பு விழா

**சென்னை**

சென்னை அருகே தாம்பரத்தில் உள்ள ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற 17-வது பட்டமளிப்பு விழாவை சாய்ராம் கல்வி நிறுவனங்களின் துணைத் தலைவர் கலைச்செல்வி, லியோமுத்து குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்.

இஸ்ரோ நிறுவனத்தின் முன்னாள் பேராசிரியரும், மணிப்பூர் என்.ஐ.டி.யின் முன்னாள் தலைவருமான ஒய்.எஸ்.ராஜன் பங்கேற்று, 1,217 மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

அப்போது பேசிய அவர், மாணவர்கள் தங்கள் உடல்நலனை பேணிக் காப்பதோடு, வாழ்நாள் முழுவதும் கற்பதை தொடர வேண்டும் என்று அறிவுறுத்தினார். எதிர்கால தலைமுறைக்கு நம்பிக்கையையும் உத்வேகத்தையும் அளிக்க வேண்டும் என பெற்றோர்களையும், ஆசிரியர்களையும் அவர் கேட்டுக் கொண்டார்.

கல்லூரியின் தலைமை நிர்வாக அதிகாரி சாய்பிரகாஷ் லியோ முத்து, 'கல்வி வளர்ச்சி, மாணவர்களின் நலன், அவர்களது எதிர்காலம், சமூக நலனில் மாணவர்களின் பங்கேற்பு ஆகியவையே நிறுவனத்தின் குறிக்கோள். அண்ணா பல்கலைக்கழக கல்லூரிகளின் தரப்பட்டியலில் எப்போதும் முதல் 10 இடங்களுக்கு சாய்ராம் கல்லூரி தொடர்ந்து இடம்பெற்று வருகிறது' என்று தெரிவித்தார்.

சாய்ராம் கல்விக் குழுமத்தின் அறங்காவலர் சர்மிளா ராஜா, செயல் இயக்குநர் சத்தியமூர்த்தி, டீன் ராஜேந்திர பிரசாத், கல்லூரி முதல்வர் முனைவர் சி.வி.ஜெயக்குமார், மேலாண்மைத் துறை இயக்குநர் க.மாறன் ஆகியோர் உரையாற்றினர்.

பல்கலைக்கழக அளவில் ரேங்க் பெற்ற மாணவர்களுக்கு கல்லூரி நிர்வாகம் சார்பில் ரூ.35 லட்சம் மதிப்பிலான தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது. அண்ணா பல்கலைக்கழக மாணவர்களின் தர எண்ணிக்கையிலான பட்டியலில் சாய்ராம் கல்லூரி தொடர்ந்து 3-வது ஆண்டாக மாநில அளவில் முதலிடத்தை பிடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.




சென்னை தாம்பரத்தில் உள்ள ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற 17-வது பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட இஸ்ரோ முன்னாள் பேராசிரியர் ஒய்.எஸ்.ராஜன், மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ்களை வழங்கி வாழ்த்தினார். சாய்ராம் கல்வி நிறுவனங்களின் துணைத் தலைவர் கலைச்செல்வி லியோமுத்து, கல்லூரியின் தலைமை நிர்வாகி சாய்பிரகாஷ் லியோமுத்து, சாய்ராம் கல்விக் குழுமத்தின் அறங்காவலர் ஜெ.சர்மிளா ராஜா, செயல் இயக்குநர் எம்.சத்தியமூர்த்தி, டீன் ராஜேந்திர பிரசாத், முதல்வர் சி.வி.ஜெயக்குமார், மேலாண்மைத் துறை இயக்குநர் க.மாறன் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

**NEWSPAPER : DAILY THANTHI**

**PUBLISHED ON : 27 - Mar - 2016**




ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரியில் நடந்த பட்டமளிப்பு விழாவில் விஞ்ஞானி ஒய். எஸ்.ராஜன், கல்லூரியின் தலைமை நிர்வாக அதிகாரி சாய்பிரகாஷ் லியோமுத்து, துணைத் தலைவர் கலைச்செல்வி லியோமுத்து மற்றும் அறங்காவலர் சர்மிளா ராஜா ஆகியோருடன் பல்கலைக்கழக ரேங்க் பெற்ற 170 மாணவர்கள் உள்ளனர்.

### தொடர்ந்து மூன்றாவது முறையாக அண்ணா பல்கலைக்கழக

# தர வரிசை பட்டியலில் முன்னிலை

மேற்கு தாம்பரம் ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரியின் 17-வது பட்டமளிப்பு விழா மார்ச் 26-ம் தேதி, கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ லியோமுத்து உள் விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்றது. இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO)-ன் முன்னாள் பேராசிரியரும் மணிப்பூர் என்.ஐ.டி.யின் முன்னாள் தலைவருமான பத்மஸ்ரீ ஒய்.எஸ்.இராஜன் இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பட்டங்களை வழங்கி சிறப்புரையாற்றினார்.

932 இளங்கலை பொறியியல் மாணவர்களும் 221 முதுகலை பொறியியல் மாணவர்களும் இவ்விழாவில் பட்டம் பெற்றனர். இளங்கலை பட்டம் பெற்றவர்களில் 96 சதவீதம் மாணவர்கள் முதல்வகுப்பு மற்றும் 'டிஸ்டிங்ஷன்' பிரிவில் தேர்ச்சி அடைந்துள்ளனர். இவ்விழாவில் பட்டம் பெற வந்த மாணவர்கள், பெற்றோர்கள், விருந்தினர்கள் என்று சுமார் 4000 பேர் கலந்துகொண்டனர்.

**பட்டமளிப்பு விழா**

சாய்ராம் கல்வி நிறுவனங்களின் துணைத் தலைவர் கலைச்செல்வி லியோமுத்து குத்துவிளக்கேற்றி பட்டமளிப்பு விழாவை துவக்கிவைத்தார். கல்லூரியின் முதல்வர் முனைவர் சி.வி.ஜெயக்குமார் வரவேற்புரையாற்றி கல்லூரியின் ஆண்டறிக்கையை வாசித்தார்.

கல்லூரியின் மேலாண்மைத் துறை இயக்குநர் முனைவர்.கே.மாறன் வாழ்த்துரை வழங்கினார்.

**உறுதியான வேலைவாய்ப்பு**

கல்லூரியின் தலைமை நிர்வாக அதிகாரி சாய்பிரகாஷ் லியோமுத்து தலைமையுரையாற்றினார். அவரது உரையில் கூறியதாவது:- எங்களது கல்லூரியில் சமுதாய வளர்ச்சியை நோக்கமாக கொண்ட கல்வி முறையை பின்பற்றுகிறோம். அத்துடன் எங்கள் மாணவர்களில் 90 சதவீதம் பேர் உலக அளவிலான நிறுவனங்களில் வேலை செய்யும் வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறோம். நன்றாக படிக்கக்கூடிய மாணவர்கள் மட்டுமில்லாமல் ஓரளவு படிக்கக்கூடிய மாணவர்களையும் நல்ல மதிப்பெண் எடுக்கவைப்பது தான் எங்களுடைய சிறப்பு.

பட்டம் பெற்ற மாணவர்களில் 2 பேர் தங்க மெடல்களையும் 170 பேர் பல்கலைக்கழக ரேங்க்-கையும் பெற்றுள்ளனர். மேலும் 2015ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழக மாணவர்களின் 'தர எண்ணிக்கைக்கான பட்டியலில் சாய்ராம் கல்லூரி தமிழ்நாட்டிலேயே முதலிடம் பெற்றுள்ளது. தொடர்ந்து மூன்று வருடங்களாக இந்த சிறப்பை எங்கள் கல்லூரி பெற்று வருகிறது.

**மாநில அளவில் முன்னிலை**

கல்லூரியில் மெக்கானிக்கல் (Mech), கம்ப்யூட்டர் சயின்ஸ் (CSE), புரொடக்ஷன் இன்ஜினியரிங், எலெக்ட்ரிக்கல் அண்ட் எலெக்ட்ரானிக்ஸ் (EEE), இன்ஸ்ட்ருமெண்டேஷன் கண்ட்ரோல் இன்ஜினியரிங் (ICE)ஆகிய 5 துறைகள் மாநில அளவில் முதலிடத்தை பெற்றுள்ளன. எலக்ட்ரானிக்ஸ் & இன்ஸ்ட்ருமெண்டேஷன் இன்ஜினியரிங் (EIE), சிவில் இன்ஜினியரிங் ஆகிய 2 துறைகள் மாநில அளவில் இரண்டாம் இடத்தை பெற்றுள்ளன. இன்பர்மேஷன் டெக்னாலஜி(IT), எலக்ட்ரானிக்ஸ் & கம்யூனிகேஷன் என்ஜினியரிங் (ECE) ஆகிய 2 துறைகள் மாநில அளவில் மூன்றாம் இடத்தை பிடித்துள்ளன. கல்லூரியில் இளங்கலை பிரிவில் உள்ள 9 துறைகளும் மாநில அளவில் முதல் மூன்று இடத்தைப் பிடித்துள்ளது எங்களுக்கு பெருமிதமாக உள்ளது.

கல்லூரி ஆரம்பித்த தினத்திலிருந்து இன்றுவரை எங்கள் மாணவர்கள் 818 பல்கலைக்கழக ரேங்குகளையும் 24 தங்க மெடல்களையும் பெற்றிருக்கிறார்கள். 2013-ம் ஆண்டில் 130 பல்கலைக்கழக ரேங்குகளை 2014-ம் ஆண்டில் 154 ரேங்குகளையும், 2015-ம் ஆண்டில்170ரேங்குகளையும் எங்களது மாணவர்கள் பெற்றுள்ளார்கள்.

இந்த கல்லூரி கடந்த 5 ஆண்டுகளாக ஆன்லைன் ரிஜிஸ்ட்ரேஷன் முறையில் மாணவர்சேர்க்கையை நடத்தி வருகிறது. எனவே மாணவர் சேர்க்கை பற்றிய விவரங்களை www.sairamgroup.in என்ற இணையதளத்தின் மூலமாக தெரிந்துகொள்ளலாம்.

**ஒய்.எஸ்.ராஜன் பாராட்டு**

ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரி மாணவர்களில் பல்கலைக்கழக ரேங்க் பெற்றவர்களில் மூன்றில் இரண்டு பேர் பெண்களாக இருப்பது பெருமையளிக்கிறது என்று ஒய்.எஸ்.ராஜன் பாராட்டினார். மேலும் அவரது உரையில் "21-ஆம் நூற்றாண்டு வாய்ப்புகளால் நிறைந்துள்ளது. மாணவர்கள் அதை சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். உழைப்பதும் செல்வம் சேர்ப்பதும் நம்முடைய வளர்ச்சிக்கு மட்டுமில்லாமல் நாட்டின் வளர்ச்சிக்கும் பயன்படும்'' என்று குறிப்பிட்டார்.

பட்டமளிப்பு விழாவில் சாய்ராம் கல்வி குழுமத்தின் அறங்காவலர் சர்மிளா ராஜா, நிர்வாக இயக்குநர் எம். சத்திய மூர்த்தி இ.ஆ.ப.(ஓய்வு) ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித்துறை டீன் இராசேந்திர பிரசாத் நன்றியுரை வழங்கினார்.

**தங்க நாணயம் பரிசு**

பட்டம் பெற்ற மாணவர்களில் இரண்டுபேர் அண்ணா பல்கலைக் கழகத்தின் தங்க மெடல்களைப் பெற்றுள்ளனர். மேலும், பல்கலைக்கழகத்தின் ரேங்க் பெற்ற 170 மாணவர்களையும் பாராட்டும் விதத்தில் அவர்கள் அனைவருக்கும் ரூ. 35 லட்சம் மதிப்பில் தங்க நாணயங்களை வழங்கியுள்ளோம் என்று ஸ்ரீசாய்ராம் பொறியியல் கல்லூரியின் தலைமை நிர்வாக அதிகாரி சாய்பிரகாஷ் லியோமுத்து தெரிவித்தார்.

**NEWSPAPER : DINAMALAR**

**PUBLISHED ON : 27 - Mar - 2016**



■ மேற்கு தாம்பரம் ஸ்ரீசாய்ராம் பொறியியல் கல்லூரியில், 17வது பட்டமளிப்பு விழா நடந்தது. சிறப்பு விருந்தினராக, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவன [இஸ்ரோ] முன்னாள் பேராசிரியரும், மணிப்பூர் என்.ஐ.டி.,யின் முன்னாள் தலைவருமான ஒய்.எஸ்.ராஜன் கலந்து கொண்டார். அருகே, கல்லூரி நிர்வாக அதிகாரி சாய்பிரகாஷ் உள்ளார்.

**NEWSPAPER : MALAI MURASU**

**PUBLISHED ON : 28 - Mar - 2016**




சாய்ராம் பொறியியல் கல்லூரியின் 17–வது பட்டமளிப்பு விழாவில் தங்க பதக்கம் பெற்ற இரண்டு மாணவிகளுக்கு பட்டங்களை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவன முன்னாள் பேராசிரியரும், மணிப்பூர் என்.ஐ.டி.யின் முன்னாள் தலைவருமான ஒய்.எஸ்.ராஜன் வழங்கிய போது எடுத்தபடம். உடன் சாய்ராம் கல்வி நிறுவனங்களின் தலைவர் கலை செல்வி லியோ முத்து கல்லூரி தலைமை நிர்வாகி சாய் பிரகாஷ் லியோ முத்து, கல்லூரி முதல்வர் ஜெயக்குமார் பேராசிரியர் மாறன் உள்ளனர்.

# சாய்ராம் பொறியியல் கல்லூரி பட்டமளிப்பு விழா!

தாம்பரம், மார்ச். 28–

காஞ்சிபுரம் மாவட்டம் தாம்பரத்தில்உள்ளசாய்ராம் பொறியில் கல்லூரியில் 17–வது பட்டமளிப்பு விழா நேற்று நடைபெற்றது. நிகழ்ச்சியை சாய்ராம் கல்வி நிறுவனங்களின் தலைவர் கலை செல்வி லியோ முத்து குத்து விளக்கு ஏற்றி துவக்கி வைத்தார். கல்லூரி முதல்வர் ஜெயக்குமார் வரவேற்றார்.

நிகழ்ச்சிக்கு கல்லூரி தலைமை நிர்வாகி சாய் பிரகாஷ் லியோ முத்து தலைமை தாங்கி வாழ்த்துரை வழங்கினார்.

அவர் பேசும் போது தமிழக பொறியியல் கல்லூரிகளின்தரத்தில்எப்போதும் முதல்பத்து இடங்களுக்குள் எங்கள் கல்லூரி இடம் பெற்று வருகிறது. கடந்த 10 வருடங்களாக இந்தியா மற்றும் உலக அளவிலான நிறுவனங்களில் எங்கள் மாணவர்கள் 90 சதவீதம் பேருக்கு மேல் உறுதியாக வேலைவாய்ப்பு ஏற்படுத்தி தந்துள்ளோம் என தெரிவித்தார்.

## பட்டமளிப்பு

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவன முன்னாள் பேராசிரியரும் மணிப்பூர் என்.ஐ.டி.யின் முன்னாள் தலைவருமான பேராசிரியர்ஒய்.எஸ்.ராஜன் சிறப்புவிருந்தினராககலந்து கொண்டு தங்க பதக்கம் வென்ற இரண்டு பேருக்கு தங்க நாணயங்களையும், பட்ட படிப்பு முடித்த 977 இளங்கலைமற்றும்240முதுகலை மொத்தம் 1217 பேருக்கு பட்டங்களையும் வழங்கி வாழ்த்தியதோடு பணம் மட்டும் குறிக்கோளாக இல்லாமல் சமக அக்கறையுடன் வாழ வேண்டும் என மாணவர்களுக்கு அறிவுறுத்தினார்.

நிகழ்ச்சியில் கல்லூரி மேலாண்மை துறை இயக்குநர் முனைவர் மாறன் மற்றும்ஏராளமானமாணவ, மாணவிகள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

**NEWSPAPER : THE NEW INDIAN EXPRESS**

**PUBLISHED ON : 29 - Mar - 2016**




# Over 1,200 Students Graduate from Sri Sai Ram College

**Express News Service**

Sri Sai Ram Engineering College conducted its 17th graduation day at Leo Muthu Indoor Stadium on its premises. Professor Y S Rajan, former chairman National Institute of Technology, Manipur, delivered the special address. He awarded degrees and gold coins worth ₹35 lakh to the two gold medalists and 170 rank holders. A total of 1,217 graduates (UG – 977 and PG – 240) received their degrees. Sai Prakash Leo Muthu, CEO, Sairam group of institutions, presided over the function. "We are not only giving importance to academics and sports, we are also keen in the upliftment of the society. We provide scholarships for students from poor families and also provide free education worth of ₹90 lakh every year for 10 students and through the Agaram Foundation," said the CEO.

**NEWSPAPER : MALAISUDAR**

**PUBLISHED ON : 27 - Mar - 2016**

### 170 பேர் பல்கலை. தரவரிசையில் இடம்பிடித்தனர்

# சாய்ராம் கல்லூரியில் பட்டமளிப்பு விழா

## இஸ்ரோ முன்னாள் விஞ்ஞானி ராஜன் பங்கேற்பு

**சென்னை, மார்ச் 27:**

**சாய்ராம் பொறியியல் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் இஸ்ரோ முன்னாள் பேராசிரியர் ஒய்.எஸ். இராஜன் கலந்துகொண்டு மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கி உரையாற்றினார். இக்கல்லூரியில் 170 பேர் அண்ணா பல்கலைக்கழக தரவரிசையில் இடம்பெற்றுள்ளனர்.**

மேற்கு தாம்பரம் ஸ்ரீசாய்ராம் பொறியியல் கல்லூரியின் 17-வது பட்டமளிப்பு விழா கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ லியோ முத்து உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்றது.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் முன்னாள் பேராசிரியரும், மணிப்பூர் என்.ஐ.டி.யின் முன்னாள் தலைவருமான ஒய்.எஸ்.இராஜன் பட்டமளிப்பு உரையாற்றி மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கினார்.

சாய்ராம் கல்வி நிறுவனங்களின் சேர்மன் கலைச்செல்வி லியோமுத்து குத்துவிளக்கேற்றி விழாவை துவக்கி வைக்க, 977 இளங்கலை பொறியியல் மற்றும் 240 முதுகலை பிரிவு என 1217 மாணவர்கள் பட்டம் பெற்றனர்.



இளங்கலை பிரிவில் பட்டம் பெற்றவர்களில் 96% பேர் முதல் வகுப்பு மற்றும் அதிக மதிப்பெண்கள் பெற்று தேர்வு பெற்றவர்கள் ஆவர்.

பட்டம் பெற்ற மாணவர்களில் 2 பேர் 2 தங்க மெடல்களும், 170 பேர் பல்கலைக்கழக ரேங்க் பெற்று, 2015-ம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழக மாணவர்களின் 'தர எண்ணிக்கை'க்கான பட்டியலில் சாய்ராம் கல்லூரி 'முதலிடம்' பெற்றுள்ளது. கடந்த மூன்று வருடங்களாக தொடர்ந்து இந்த சாதனை புரிந்து வருகிறது.

முன்னதாக கல்லூரி முதல்வர் முனைவர் சி.வி.ஜெயக்குமார் வரவேற்புரையாற்றி கல்லூரியின் ஆண்டறிக்கை வாசித்தார்.

கல்லூரியின் மேலாண்மை துறை இயக்குனர் முனைவர் க.மாறன் வாழ்த்துரை வழங்கினார். சாய்ராம் கல்வி குழுமத்தின் டிரஸ்டி சர்மிளா ராஜா மற்றும் நிர்வாக இயக்குனர் சத்தியமூர்த்தி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். ராஜேந்திரபிரசாத் (டீன்) நன்றியுரை வழங்கினார்.

கல்லூரி நிர்வாகம் சார்பாக ரூ.35 லட்சம் மதிப்பிலான தங்க பதக்கத்தை பல்கலைக்கழக அளவிலான ரேங்க் பெற்ற மாணவர்களுக்கு வழங்கப் பட்டது.

**NEWSPAPER : DINACHEITHI**

**PUBLISHED ON : 27 - Mar - 2016**




ஸ்ரீசாய்ராம் பொறியியல் கல்லூரியின் 17- வது பட்டமளிப்பு விழாவில், தங்க பதக்கம் பெற்ற 2 மாணவிகளுக்கு பட்டங்களை வழங்குகிறார் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவன முன்னாள் பேராசிரியரும் மணிப்பூர் என்.ஐ.டியின் முன்னாள் தலைவருமான பேராசிரியர் ஒய்.எஸ்.ராஜன். அருகில் ஸ்ரீசாய்ராம் கல்வி நிறுவனங்களின் தலைவர் கலைச் செல்வி லியோ முத்து, கல்லூரி தலைமை நிர்வாகி சாய்பிரகாஷ் லியோ முத்து, முதல்வர் ஜெயக்குமார் பேராசிரியர் மாறன் ஆகியோர் உள்ளனர்.

## ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரியில்

# 1217 பேருக்கு பட்டம்

### பேராசிரியர் ராஜன் வழங்கினார்

தாம்பரம், மார்ச் 27- ஸ்ரீசாய்ராம் பொறியியல் கல்லூரியில் நடந்த பட்டமளிப்பு விழாவில் 1217 பேருக்கு பட்டங்களை பேராசிரியர் ஒய்.எஸ்.ராஜன் வழங்கினார்.

**பட்டமளிப்பு விழா**

காஞ்சிபுரம் மாவட்டம் தாம்பரத்தில் உள்ள ஸ்ரீசாய்ராம் பொறியியல் கல்லூரியில் 17- வது பட்டமளிப்பு விழா நேற்று நடைபெற்றது. நிகழ்ச்சியை சாய்ராம் கல்வி நிறுவனங்களின் தலைவர் கலைச்செல்வி லியோமுத்து குத்துவிளக்கு ஏற்றி தொடக்கி வைத்தார். கல்லூரி முதல்வர் ஜெயக்குமார் அனைவரையும் வரவேற்றார்.

விழாவுக்கு கல்லூரி தலைமை நிர்வாகி சாய்பிரகாஷ் லியோ முத்து தலைமை தாங்கி, பேசினார். அவர் பேசும் போது, தமிழக பொறியியல் கல்லூரிகளின் தரத்தில் எப்போதும் முதல் 10 இடங்களுக்குள் எங்கள் கல்லூரி இடம் பெற்று வருகிறது.

கடந்த 10 ஆண்டுகளாக இந்தியா மற்றும் உலக அளவிலான நிறுவனங்களில் எங்கள் மாணவர்களில் 90 சதவீதம் பேருக்கு மேல் உறுதியாக வேலைவாய்ப்பு ஏற்படுத்தி தந்துள்ளோம் என்றார்.

**1217 பேருக்கு பட்டம்**

விழாவில் சிறப்பு விருந்தினராக, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவன முன்னாள் பேராசிரியரும் மணிப்பூர் என்.ஐ.டி.யின் முன்னாள் தலைவருமான பேராசிரியர் ஒய்.எஸ்.ராஜன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, தங்கப் பதக்கம் வென்ற 2 பேருக்கு ரூ.35 லட்சம் மதிப்பிலான தங்க நாணயங்களை வழங்கினார்.

மேலும், பட்ட படிப்பு முடித்த 977 இளங்கலை மற்றும் 240 முதுகலை மொத்தம் 1217 பேருக்கு பட்டங்களை வழங்கி வாழ்த்திய அவர், பணம் மட்டும் குறிக்கோளாக இல்லாமல் சமூக அக்கறையுடன் வாழவேண்டும் என மாணவர்களை கேட்டுக் கொண்டார்.

நிகழ்ச்சியில் கல்லூரி மேலாண்மை துறை இயக்குனர் முனைவர் மாறன் மற்றும் ஏராளமான மாணவ-மாணவிகள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்

NEWSPAPER : DINAKARAN

PUBLISHED ON : 27 - Mar - 2016

# சாய்ராம் கல்லூரி பட்டமளிப்பு விழா

தாம்பரம், மார்ச் 27: தாம்பரம் அருகேயுள்ள சாய்ராம் பொறியியல் கல்லூரியின் 17வது பட்டமளிப்பு விழா நேற்று நடந்தது. கல்லூரி சேர்மன் கலைச்செல்வி லியோமுத்து குத்துவிளக்கேற்றி தொடங்கிவைத்தார். விழாவில், 977 பேர் இளங்கலை பொறியியல் பிரிவிலும், 240 பேர் முதுகலை பிரிவிலும் என மொத்தம் 1217 மாணவ மாணவியர் பட்டங்களை பெற்றனர். இவர்களில் 890 மாணவ, மாணவியர் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றனர்.

மேலும், 170 மாணவ, மாணவியர் தங்க பதக்கங்களுடன், அண்ணா பல்கலைக்கழகத்தில் 2015ம் ஆண்டுக்கான ரேங்க் பெற்றனர். பல்கலைக்கழக மாணவர்களின் தர எண்ணிக்கைக்கான பட்டியலில் தமிழகத்திலேயே சாய்ராம் கல்லூரி முதலிடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

நிகழ்ச்சியில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் முன்னாள் பேராசிரியர் பத்மஸ்ரீ ஒய்.எஸ். ராஜன், சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு மாணவ மாணவியருக்கு பட்டங்களை வழங்கினார். முன்னதாக, கல்லூரி முதல்வர் சி.வி. ஜெயக்குமார் வரவேற்று, ஆண்டறிக்கையை சமர்ப்பித்தார். தலைமை நிர்வாக அதிகாரி சாய்பிரகாஷ் லியோமுத்து, கல்லூரி மேலாண்மை துறை இயக்குனர் மாறன், கல்லூரி டிரஸ்டி சர்மிளா ராஜா, நிர்வாக இயக்குனர் சத்தியமூர்த்தி உட்பட பலர் கலந்துகொண்டனர். முடிவில் ராஜேந்திர பிரசாத் நன்றி கூறினார்.

**NEWSPAPER : MAALAIMALAR**

**PUBLISHED ON : 27 - Mar - 2016**



ஸ்ரீசாய்ராம் பொறியியல் கல்லூரியின் 17–வது பட்டமளிப்பு விழாவில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவன முன்னாள் பேராசிரியரும், மணிப்பூர் என்.ஐ.டி.யின் முன்னாள் தலைவருமான பத்மஸ்ரீ ஒய்.எஸ்.ராஜன் மாணவ – மாணவிகளுக்கு பட்டங்கள் வழங்கினார். அருகில் கல்லூரி தலைமை நிர்வாக அதிகாரி சாய்பிரகாஷ் லியோமுத்து.

### ஸ்ரீசாய்ராம் பொறியியல் கல்லூரியில்

# 1217 மாணவ–மாணவிகளுக்கு பட்டங்கள்

## இஸ்ரோ பேராசிரியர் ராஜன் வழங்கினார்

சென்னை, மார்ச். 27– மேற்கு தாம்பரம் ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரியின் 17–வது பட்டமளிப்பு விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

**1217 பேருக்கு பட்டம்**

இதில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் முன்னாள் பேராசிரியரும் மணிப்பூர் என்.ஐ.டி.யின் முன்னாள் தலைவருமான பத்மஸ்ரீ ஒய்.எஸ்.ராஜன் பங்கேற்று 1217 மாணவ – மாணவிகளுக்கு பட்டங்கள் வழங்கினார்.

பட்டம் பெற்றவர்களில் 881 பேர் இளங்கலை மற்றும் 240 பேர் முதுகலை பிரிவு மாணவர்கள் ஆவர். 890 மாணவர்கள் முதல் வகுப்பு மற்றும் டிஸ்டிங்ஷன் பெற்று தேர்வு பெற்றவர்கள்.

பட்டம் பெற்ற மாணவர்களில் 2 பேர் தங்க பதக்கங்களுடன் 170 பேர் பல்கலைக்கழக ரேங்க் பெற்று சாதனை படைத்தனர்.

2015–ம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகமாணவர்களின் தர வரிசை பட்டியலில் தமிழகத்திலேயே சாய்ராம் கல்லூரி கடந்த 3 வருடமாக தொடர்ந்து முதலிடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

பட்டமளிப்பு விழாவில் பத்மஸ்ரீ ஒய்.எஸ்.ராஜன் பேசும்போது கூறியதாவது:–

**புதிய கண்டுபிடிப்பு**

நடுத்தர வர்க்கம் அதிகம் நிறைந்த நாடான இந்தியாவில் கல்வித் துறையில் தனியார் நிறுவனங்களின் பங்களிப்பு இன்றியமையாதது. சேவை மனப்பான்மையில் லியோ முத்துவால் உருவாக்கப்பட்ட ஸ்ரீசாய்ராம் பொறியியல் கல்லூரி கல்விப் பணியில் சாதனை படைத்து வருவது மகிழ்ச்சிக்குரியது.

மாணவர்களாகிய நீங்கள் உங்களது எதிர்கால வாழ்க்கைக்கு மட்டுமின்றி நாட்டு வளர்ச்சிக்கு பங்களிக்கும் வகையில் பணியாற்ற வேண்டும். புதிய கண்டுபிடிப்புகளை நாட்டுக்கு அர்ப்பணிக்க வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் சாய்ராம் கல்வி நிறுவனங்களின் துணைத் தலைவர் கலைச் செல்வி லியோமுத்து குத்து விளக்கு ஏற்றி வைத்தார்.

கல்லூரியின் தலைமை நிர்வாக அதிகாரி சாய் பிரகாஷ் லியோமுத்து, தலைமை உரையில் பேசுகையில், பொறியியல் கல்லூரிகளின் தரத்தில் எப் போதும் முதல் 10 இடங்களுக்குள் இருப்பது எங்கள் கல்லூரியின் பலம். கல்விக்காக மட்டுமின்றி சமுதாய வளர்ச்சி நோக்கோடு கலந்த கல்வி போதனை மற்றும் பல்கலைக்கழக தேர்வு வெற்றி 100 சதவீதமாகும். எங்கள் கல்லூரியில் அனைவருக்கும் வேலை வாய்ப்பை ஏற்படுத்தி தருவது எங்களது தனிச்சிறப்பு.

இவ்வாறு அவர் பேசினார்.

கல்லூரி முதல்வர் சி.வி. ஜெயக்குமார் ஆண்டறிக்கை வாசித்தார். மேலாண்மை துறை இயக்குனர் மாறன், சாய்ராம் கல்வி குழும டிரஸ்டி சர்மிளாராஜா, செயல் இயக்குனர் சத்தியமூர்த்தி, டீன் ராஜேந்திர பிரசாத் பங்கேற்று பேசினர். கல்லூரி நிர்வாகம் சார்பாக ரூ.35 லட்சம் மதிப்பிலான தங்க பதக்கம் பல்கலைக்கழக அளவிலான ரேங்க் பெற்ற மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

**NEWSPAPER : VIDUTHALAI**

**PUBLISHED ON : 29 - Mar - 2016**

சிறீசாய்ராம் பொறியியல் கல்லூரியின் 17ஆவது பட்டமளிப்பு விழா

# மாணவர்கள் தங்களது திறனை மேம்படுத்தி புதிய கண்டுபிடிப்புகளை நாட்டுக்கு அளிக்க வேண்டும்

## - பேராசிரியர் ஒய்.எஸ்.இராஜன் வலியுறுத்தல் -



[illegible]

'விடுதலை'யில் வெள்ளிதோறும்

**'பகுத்தறிவுக் களஞ்சியம்'**

சிறப்புப் பகுதியை படியுங்கள்